1981 மார்ச் 2]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு, குடியாத்தம் போன்ற பகுதிகளில் ஏராளமான பீடித் தொழிலாளர்கள் இருப்பதால், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு. திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே முன் வருவதற்கில்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் ; கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, நகரப் பகுதிகளிலேதான் இப்போது நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. கிராமப் பகுதிகள் நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற வகையில் பதில் சொன்னார்கள். நம்முடைய அரசை நம்பி, கிராமப் பகுதிகளிலே இருக்கக் கூடிய ஏராளமான மக்கள் நமக்கு ஓட்டளித்தார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கிராமப் புறங்களுக்கும் விரிவு படுத்துவதற்கு மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களுக்கு கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான திட்டம் செயல்பட்டு வருகிறது ; அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சென்னை நகரம் தவிர்த்து ஏனைய நகரங்களில் முன்பிருந்த அரசு காலத்தில், இன்றைய சபாநாயகர் அவர்கள், அந்த அமைச்சர் பொறுப்பிலிருந்த வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக வேறு பல இடங்களுக்கு குடிசை மாற்றுப் பணிகளை கவனித்து வந்தார்கள். இப்போது அந்தப் பணி தொடருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, தொடரப்படுகிறது. சேலம், திருச்சி, மதுரை, கோவை நகரங்களில் தொடரப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சேலத்தில் நடக்கிறது.

வேலூர் நகர குடிதண்ணீர்த் திட்டம்.

*வினா எண் 330— திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் நகர குடி தண்ணீர் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

(ஆ) இதில் தற்போது செலவு எவ்வளவு ?

(இ) இத் திட்டம் எப்போது முடிக்கப்படும் ?

11981 மார்ச் 2

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) வேலூர் நகர குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின், திருத்திய மதிப்பீடு ரூ. 129.27 இலட்சங்கள்.

(ஆ) ஜூன் 1980 இறுதிவரை மொத்தச் செலவு ரூ. 126.91 இலட்சங்கள்.

(இ) 1981 ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் இத் திட்ட வேலைகள் முடிவடையலாம்.

திரு. இல. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத திட்டத்தின்கீழ் வழியோர கிராமங்கள் மணலூர், கருகா புத்தூர், செம்பாக்கம் போன்ற கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, வழியோர கிராமங்களில் சில சேர்க்கப்பட்டிருந்து, இப்போது அவைகள் சேர்க்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதி யுடன் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

குடிசைமாற்று வாரியப் பகுதிகளில் சுகாதாரப் பணி

*வினா எண் 331—திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிசைமாற்று வாரியப் பகுதிகளில் சுகாதாரப் பணி களுக்காக வெளிநாட்டு நிறுவனங்கள் ஏதாவது அரசுக்கு உதவி அளிக்கிறதா ?

(ஆ) இல்லையெனில் பொது நலன்களுக்காக இயங்கும் வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து அரசு உதவி பெறும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) : ஆம். உலக வங்கியிடம் இருந்து குறைந்த வட்டியில் கடன் உதவிபெற்று குடிசைப்பகுதி மாற்று வாரியப் பகுதிகளில் தேவையான அடிப்படை வசதிகள் செய்துதரப்பட்டு வருகின்றன.